திரு. கே. ராமதாஸ் : தலைவரவர்களே, சமீபத்தில் திரு ஜீ. டி. நாயுடு அவர்கள் குறைந்த விலையில் வீடுகள் கட்டியிருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அம்மாதிரி திட்டத்தில் குறைந்த விலையில் வீடுகள் கட்டுவதற்கு இந்த அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட வீடுகளைப் பற்றி ஹரிஜன இலாகா இயக்குனர் அவர்கள் ஆராய்ந்து விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். விவரங்கள் சேகரிக்கப்பட்ட பிறகு அது பற்றி நடவடிக்கைகள் மேற்கொள்ள முயற்சி செய்யலாம்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : வீடுகள் கட்டுவதற்கு ஆகும் தொகை 1,200 ரூபாய், 800 ரூபாய் ஆகியவைக்குள் முடிந்து விடக்கூடுமென்றாலும், மனை வாங்குவதற்கு சில இடங்களில் 3,000 ரூபாய் வரை வருகிறது என்பதை உணரவேண்டும்.

திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, முந்தைய கவுண்டன் பட்டி என்ற ஊரில் வீடுகளைக் கட்டி அது இடிந்து போய் தொல்லைகள் ஏற்பட்டனவே ; அது போல் இல்லாமல் நல்லமுறையில் கழக அரசு வீடுகள் கட்டிக்கொடுக்க அக்கறை செலுத்துமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, கடன் முறையில் ஆயிரம் ரூபாய் ஒதுக்கி, 750 ரூபாய் மானியமாகவும், 125 ரூபாய் அவர்களுக்கு கடனாகவும் தரப்பட்டு வந்தது. அதனால் ஆயிரம் ரூபாயில் இந்த கவுண்டன்பட்டி ஊரில் வீடுகள் கட்டப்பட்டது, இடிந்து போனது. அந்தத் திட்டத்தை இந்த புதிய அரசு கைவிட்டு விட்டது. எனவேதான் மத்திய சர்க்கார் உதவியோடு 3,000 ரூபாயில் திட்டம் போடப்பட்டு இருக்கிறது.

திரு. ஏ. சாம்பசிவ ரெட்டியார் : தலைவரவர்களே, கோவையில் உள்ள பேரறிஞர் ஜீ. டி. நாயுடு அவர்கள் சமீபத்தில் ஒரே நாளில், 9 மணி நேரத்தில் சொற்பச் செலவில் வீடுகள் கட்டி அதை நம்முடைய மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களும், சுகாதார அமைச்சர் அவர்களும் திறந்து வைத்ததாக பத்திரிகையில் பார்த்தேன். அப்படி குறுகிய காலத்தில் சொற்ப விலையில் வீடு கட்டுவது பற்றி இந்த அரசாங்கம் ஆராய்ந்து விரைந்து நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இந்த வீடுகள் நீண்ட காலத்திற்கு தாங்குமா என்பதை பரிசீலித்த பிறகு தான் சொல்ல வேண்டும்.

திரு. எம். எத்திராஜுலு : தலைவரவர்களே, 3,000 ரூபாயில் வீடுகள் கட்டப் போவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த வீடுகள் மிகவும் பின் தங்கிய சலவைத் தொழிலாளர்கள், சவரத் தொழிலாளர்கள் போன்றவர்களுக்குக் கட்டிக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : இப்போது சொல்லப்பட்ட வீடுகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகும். ஏனைய மக்களுக்கு 100-க்கு 10 சதவீதம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அந்த விகிதத்தில் அவர்களுக்கும் வீடு கிடைக்கலாம்.

Sankarankoil Hospital.

*147 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Sankarankoil Hospital in Tirunelveli district is functioning without a lady doctor for the past one year ;

(*b*) whether it is a fact that from 19th September 1967 there is no male doctor too ; and

(c) the number of other hospitals where there are no doctors from the beginning of this financial year.

1st March 1968]

சங்கரன் கோவில் மருத்துவச்சாலை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி ஜில்லா சங்கரன் கோவில் மருத்துவச்சாலை சென்ற ஒரு வருடமாக பெண் மருத்துவர் இல்லாமல் இயங்கி வருகிறதா?

(இ) 19-9-1967 முதல் ஆண் மருத்துவரும் இல்லையென்பது உண்மையா?

(உ) மற்ற ஆஸ்பத்திரிகளில் இந்த நிதியாண்டு ஆரம்பத்தில் இன்னும் எததனை இடங்களில் டாக்டரில்லை?

மாண்புமிகு திரு. எ. முத்துசாமி : (அ) (இ) இல்லை.

(உ) விவரங்கள் சேகரிக்கப்பட்டு அவையின் முன் வைக்கப்படும்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர்வரகளே, இந்த பதிலில் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. இந்த விவரங்கள் எப்போது சேகரிக்கப்படும்? எப்போது இந்த அவையில் வைக்கப்படும்?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : கனம் உறுப்பினர் அவர்கள் ஏராளமான கேள்விகளை அனுப்புகிறார்கள். அதுவும் கடைசி நேரத்தில் அனுப்புகிறார்கள். இவைகளுக்கு தகவல் கேட்டு மாவட்டங்களுக்கு அனுப்பி அங்கிருந்து பதில் வருவதற்கு தாமதமாகிறது. அவைகள் வந்தவுடன் இந்த மன்றத்தில் வைக்கப்படும்.

Government Hospital, Shencottah

*148. —Thiru N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state :—

(*a*) whether a lady doctor has not been appointed for the past few months in the Government hospital, Shencottah, Tirunelveli district ;

(*b*) whether it is a fact that the male doctor working in that hospital is often attending the courts ; and

(*c*) whether the Government are aware of the fact that the public are affected without getting medical aid as the doctor was not in station most of the days during the last 3 months ?

செங்கோட்டை அரசினர் மருத்துவமனை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) திருநெல்வேலி மாவட்ட செங்கோட்டை அரசினர் மருத்துவமனையில் சில மாதங்களாக பெண் டாக்டர் நியமிக்கப்படவில்லையா?

(இ) அங்குள்ள ஆண் டாக்டரும் அடிக்கடி நீதிமன்றத்திற்குப் போய் விடுகிறாரென்பது உண்மையா ?

(உ) சென்ற 3 மாத காலமாக பெரும்பாலான நாட்கள் டாக்டரின்றி பொது மக்கள் பாதிக்கப்பட்டது அரசு அறியுமா?